R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
April 2018




சென்னை வேல்டு இவான்சலிசம் வேதாகம பள்ளி மாணவர்களும், ஆசிரியர்களும் மற்றும் புதிதாக கலந்துகொண்ட ஊழியர்களும்

புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்;
அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது;
எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது – 2கொரிந்தியர் 3:6

*Our Radio Program:* Sri Lanka Radio SW 31 Meter Every Saturday 5.30P.M & Our TV Program: Nambikkai TV Every Saturday 8.00 P.M & Tamilan TV Every Thursday 6.00 P.M

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*

*Office Address*
*The Word of Christ, D/5 Rajan Nagar*
*Batlagundu -624202, DINDIGUL DIST*
*TAMIL NADU INDIA*

**To**

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA



Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 18 | ஏப்ரல் 2018 | கனி 5

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக – கொலோசெயர் 3:16

THE WORD OF CHRIST



ஆசிரியர்
B. அர்ஜுனன்

**Arjunan in Tamil:**
TV: Every Saturday 8:00 - 8:30 pm on Nambikkai TV.
Every Thursday 6:00 - 6:30 pm on Tamilan TV
Radio: Every Saturday 5:30 - 5:45 pm on 31 meter band on Sri Lanka radio.

**Hindi TV program:** Sunny, Francis, & Vinay David speaking. Sunday &Tuesday (7:00-7:30) pm on Shubhasandesh Hindi Channel


**P. K. Varghese in Malayalam:**
Every Saturday 6:00-6:30 am on Jai Hind channel TV.

**Philemon & Kingsley in Tamil:**
Tamilan TV: Sunday 6:45 - 7:00 am.
Nambikkai TV: Friday 6:00 - 6:30 am.

**Rajanayagam in Tamil:**
Tamilan TV: Monday 7:00-7:15 am
Thursday 9:30-10:00 pm.
Saturday 7:15-7:30 am.

**P. R. Swamy and Douglas in Tamil:**
Every Sunday to Wednesday at 5:30-5:45 pm on 31 meter band of Sri Lankan radio.

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6.00 p.m.on Subhavartha channel
Every Wednesday at 6:30 p.m. on Rakshana channel
Every Thursday at 11:00 a.m. on Rakshana channel
Satyavani T.V. online: www.sakthitv.in
Every Wednesday & Friday at 8:00 pm.
Every day at 7:30 a.m. and 3:30 p.m. on Kanthi TV in A. P. only.





**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

திி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 212

### போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை பின்வரும் மாத இதழில்களில் காண்க.

1. பாபிலோன் கோவிலில் வைத்திருந் எருசலேம் தேவாலயத்தின் பொன் வெள்ளிப் பணிமுட்டுகளை திரும்ப அதின் ஸ்தானத்திலே கட்டப்படவேண்டும் என அறிவித்த ராஜா யார்?
2. நாங்கள் எப்பொழுதும் உங்களுக்காகத் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம் என எழுதும் அப்போஸ்தலன் யார்?
3. யாருடைய நாட்களில் ஒரு ஜாமமட்டும் கர்த்தரின் நியாயப்பிரமாணப்புஸ்தகம் வாசிக்கப்பட்டது? பின்பு ஒரு ஜாமமட்டும் அவர்கள் பாவ அறிக்கைபண்ணி, தங்கள் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டார்கள்?
4. நான் வருமளவும் வாசிக்கிறதிலும் புத்தி சொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு என யார் யாருக்கு எழுதுவது?
5. மொர்தெகாய் தன்னை வணங்கி நமஸ்கரியாததைக் கண்டபோது, மூர்க்கம் நிறைந்தவனானவன் யார்?
6. சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வருமா?
7. என் கால்கள் அவர் அடிகளைப் பற்றிப்பிடித்து; அவருடைய நெறியைவிட்டு நான் சாயாமல் அதைக் கைக்கொண்டேன் என்று சொல்லும் தாசன் யார்?
8. கண்காணியானவன் தேவனுடைய உக்கிராணக்காரனுக்கேற்றவிதமாய் பணியாற்றவேண்டுமா?
9. என் கால் சறுக்குகிறது என்று நான் சொல்லும்போது, கர்த்தாவே, உமது கிருபை என்னைத் தாங்குகிறது என்ற தாசன் யார்?
10. இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் எப்படிப்பட்டவராயிருக்கிறார்?

### போட்டியாளர்கள் கவனிக்க...

ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை படிக்க ஆர்வமுள்ளவர்களுக்கும் அறிமுகம் செய்யவும். நன்றி. ஆசிரியர்

### இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும்

30

நாள்: 01.04.2018 ஞாயிற்று கிழமை
நேரம்: மாலை 6.00 மணி
இடம்: சகோதரி.எஸ்தர்
ஜெப ஐக்கிம், 5/31 A ராஜா காம்ப்ளக்ஸ்,
மகாராஜாநகர், விரகனூர் (P.O)
மதுரை மாவட்டம்
தொடர்புக்கு:
B.அர்ஜுனன், 9443558041






சிறுவர் பகுதி

# நன்றி Thanks

-K.Mohan

வேதவாசிப்பு: லூக்கா 17:12-17

பிரியமான பிள்ளைகளுக்கு இயேசுவின் தூய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள். இந்த மாதமும் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாதம் தேவனுக்கு நன்றி செலுத்தும் காரியத்தைக்குறித்துப் பார்ப்போம். லூக்கா17:12-19 வசனங்களை வாசிக்கும் போது பத்து குஷ்டரோகிகள் சுத்தமானதைக் காண்கிறோம். குஷ்டரோகம் என்ற நோய் மிகவும் அருவருப்பான நோய். இந்த நோய் உள்ளவர்களை மற்றவர்கள் பார்க்கும் போதெல்லாம் அருவருப்பாக நினைப்பார்கள். குஷ்டரோகிகளைக் கண்டாலே பக்கத்தில் கூட வரமாட்டார்கள். இவர்கள் ஊருக்கு புறம்பே தான் இருக்கவேண்டும். தீட்டு தீட்டு என்று சத்தமிடவேண்டும். இப்படிப்பட்ட வியாதியுள்ள மனுஷன் ஆசாரியனுக்கு தன்னைக் காண்பிக்கவேண்டும். சுத்திகரிப்பின் நாட்கள் முடியும்வரை பாளையத்திற்கு புறம்பே இருக்கவேண்டும் என்ற நியதியெல்லாம் இருந்ததாக நாம் பரிசுத்தவேதாகமத்தில் காண்கிறோம்.

இப்படிப்பட்ட குஷ்டரோகம் நிறைந்த பத்துப்பேர் இயேசுவினிடம் வந்து ஐயரே எங்களுக்கு இரங்கும் என்று இயேசுவை வேண்டிக்கொண்டார்கள். நம்முடைய ஆண்டவர் இயேசு அவர்களைப் பார்த்து: நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். அந்தப்படி அவர்கள் போகையில் என்ன நடந்தது தெரியுமா? அந்த பத்துபேருடைய குஷ்டரோகமும் மாறியது என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா! அர்களுக்கு ஒரே சந்தோஷம். அவர்களில் ஒருவன், தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பிவந்து, உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தி, ஆண்டவருடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து, அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினான். அவனோ சமாரியனாயிருந்தான். ஆண்டவர் மற்ற ஒன்பதுபேர் எங்கே என்று கேட்டார்.

தேவனை மகிமைப்படுத்துகிறதற்கு, இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பிவரக்காணோம் என்றார். அன்பான பிள்ளைகளே, இந்த அந்நியனைப்போல ஒரு சிலர்தான் தேவனுக்கு நன்றியுள்ள மக்களாக வாழ்கின்றனர். நீங்கள் இந்த அந்நியனைப்போல நன்றியுள்ள பிள்ளைகளாக வாழ்வீர்களா? அப்படி வாழ்வீர்கள் என்றால் கர்த்தர் உங்களை இன்னும் அதிகமாக காத்து வழிநடத்துவார். வரவிருக்கும் விடுமுறை நாட்களை VBS உடன் கொண்டாடும்படி நான் உங்களுக்காக ஜெபிக்கின்றேன்.

**மனப்பாட வசனம்**

**“எலியா தீர்க்கதரிசியின் காலத்திலே இஸ்ரவேலருக்குள்ளே அநேகம் குஷ்டரோகிகள் இருந்தார்கள்;**
**ஆயினும் சீரியா தேசத்தானாகிய நாகமானேயல்லாமல் அவர்களில் வேறொருவனும் சுத்தமாக்கப்படவில்லை என்று சத்தியத்தின்படியே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்"**
**(லூக்கா4:27)**

**"நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள்" மாற்கு 11:24**




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 18 ஏப்ரல் -2018 கனி - 5


ஆசிரியருரை

## தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்
## God Was Manifested In The Flesh



இந்த உலகத்திலே இருக்கிற மனிதர்களில் பலர் நினைப்பதுண்டு அந்த ஆண்டவன் இந்தப்பூமிக்கு வந்து மனிதனைப்போல மனிதனாக வாழ்ந்து கஷ்டங்களை அனுபவித்தால்தான் தெரியும் என்பார்கள். அன்பானவர்களே மனிதனுடைய இருதயத்தின் எண்ணங்களை அறிந்த தேவன் தன்னை மனிதனுக்கு வெளிப்படுத்தும்படியாகவும் அவனை பாவத்திலிருந்து மீட்கும்படியாகவும் மாம்சத்திலே வெளிப்பட்டார். இதைக்குறித்து பவுல் சொல்கிறார்; "அன்றியும் தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது, தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்" என 1தீமோ. 3:16-ல் வாசிக்கிறோம்.

**தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்.** அவர் ஒரு மனிதனைப்போல மாம்சத்திலே தன்னை வெளிப்படுத்தியதற்கு பல காரணங்கள் உண்டு. ஒன்று மனிதன் மாம்சத்திலே இருந்து கொண்டு பாவத்தை ஜெயிக்கமுடியும் என்பதை நிரூபிக்கும்படியாகவும், தேவனுடைய சித்தத்தை ஒவ்வொரு மனிதனும் மாம்சத்திலே இருந்துகொண்டு நிறைவேற்றமுடியும் என்பதை அனைவருக்கும் எடுத்துச்சொல்லும்படியாகவும், தேவனுடைய போதனைகளை ஜனங்களுக்குச் சொல்லும்படியாகவும் தேவன் மாம்சத்திலே அவருடைய குமாரனின் சாயலிலே வெளிப்பட்டார். "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" என்கிறார் (யோவா.1:14). மாம்சத்திலே வந்து மனிதனோடு மனிதனாக வாழ்ந்த அந்த ஆண்டவர் இயேசுவை இப்புவியில் உள்ள மக்கள் அறியாமற்போனார்கள். அவர் கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் வாசம்பண்ணினார். அவருடைய சத்தியத்திற்கு அந்த யூத மக்களே எதிராக இருந்து செயல்பட்டார்கள். மாபெரும் அற்புதங்களை அவர்கள் கண்ணாரக்கண்டும் அதை ஏற்றுக்கொள்ளாமல் அவரை சிலுவையில் அறையும்படி ஒப்புக்கொடுத்தார்கள்.

**அவர் ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார்.** பாவ உலகத்தில் மாம்சத்திலே வெளிப்பட்ட அவர் பாவம் செய்யவில்லை. நீதிமான் என்று

சாட்சி பெற்றார். எத்தனையோ தீர்க்கதரிசிகளை உலகத்திற்கு அனுப்பிக்கொண்டுவந்த தேவன் இந்தக் கடைசி நாட்களில் தம்முடைய ஒரேபேறான குமாரனையே அனுப்பினார். இவர்மூலமாய் உலகங்களை உண்டாக்கினார். ஆகையால் இவரைக்கொண்டு உலகத்தை இரட்சிக்கும்படியாக திட்டம் கொண்டார். உலக மக்கள் அவரை சிலுவையில் அறையும்படி ஒப்புக்கொடுத்தார்கள். ஆனால் பிலாத்துவின் மனைவியோ; "அவனிடத்தில் ஆளனுப்பி: நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம்; அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகு பாடுபட்டேன் என்று சொல்லச் சொன்னாள்" (மத்.27:19). யூதர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் அவர் தேவதூஷணம் சொன்னார் என்று சொல்லி அநேக குற்றச்சாட்டுகளை சொன்னார்கள். ஆனால் பிலாத்துவின் மனைவியோ அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம் என்று என்றாள். ஆம் பிரியமானவர்களே, அவர் ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார்.

**தேவதூதர்களால் காணப்பட்டார்.** இந்த உலகத்தில் அவர் மாம்சத்திலே பிறக்கும்போது தேவதூதர்கள் அவருடைய பிறப்பைக்குறித்து சொன்னார்கள். சாஸ்திரிகள் அவரை பார்க்கும்படிபோனார்கள் என்றெல்லாம் நாம் வேதத்தில் வாசிக்கிறோம். உலகம் உண்டானது முதல் இவ்விதமான காரியம் சம்பவிக்கவில்லை. ஆகையால் தேவதூதர்களும் அவைகளைப் பார்க்க ஆவலாய் இருந்தார்கள். "அந்தஷணமே பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி; உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத்துதித்தார்கள்" (லூக்.2:13,14). அவருடைய பிறப்பைக்குறித்து அநேக தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசனம் உரைத்ததுண்டு. இது உலகத்திற்கு கிடைத்த ஒரு மாபெரும் நற்செய்தியாகவே காணப்பட்டது. ஆகையால் தேவதூதர்கள் சொல்லும்போது; பூமியிலே சமாதானமும் உண்டாவதாக. சமாதானமற்றிருந்த பூமிக்கு அன்றைய நாள் சந்தோஷத்தின் நாளாகவும் சமாதானத்தின் நாளாகவும் இருந்தது.

**புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார்.** இயேசுவின் கீர்த்தி பெத்லகேமை சுற்றியுள்ள நாடுகளுக்குப் பரவ ஆரம்பித்தது. இயேசுவானவர் யூதா கோத்திரத்திலே வெளிப்பட்டார். அவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகையால் புறஜாதிகளிடத்தில் அவர் பிரசங்கிக்கப்பட்டார். யூதேயா, சமாரியா, கலிலேயா நாடுகளில் அவருடைய கீர்த்தி அதிகமதிகமாய் பரவிற்று. அப்போஸ்தலர்களுக்கு கர்த்தர் கட்டளை கொடுக்கும்போது நீங்கள் உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தை அறிவியுங்கள் என்ற கட்டளை கொடுக்கப்பட்டது. ஆகையால் அவர்கள் புறப்பட்டு சகல நாடுகளிலும் சுவிசேஷத்தை அறிவித்தனர். பவுலும் பர்னபாவும் ஊழியம் செய்து கொண்டு வந்த நாட்களில் "ஓய்வுநாளிலே கொஞ்சங்குறையப் பட்டணத்தாரனைவரும் தேவ வசனத்தைக் கேட்கும்படி கூடிவந்தார்கள். யூதர்கள் ஜனக்கூட்டங்களைக் கண்டபோது பொறாமையினால் நிறைந்து, பவுலினால் சொல்லப்பட்டவைகளுக்கு எதிரிடையாய்ப் பேசி, விரோதித்துத் தூஷித்தார்கள். அப்பொழுது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி: முதலாவது உங்களுக்கே தேவசனத்தைச் சொல்லவேண்டிய தாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக்கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம். நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர்



மற்றவர்களுடைய வாக்கு வாதங்களினால் அடித்துச் செல்லப்படவில்லை.

1. மற்றவர்கள் புதிய தலைவனைத் தேர்ந்தெடுத்து எகிப்துக்கு திரும்பிச் செல்லவேண்டுமென்று கூச்சலிட்டபோது காலேப் உறுதியாக எதிர்த்து நின்றான்.

2. முடியாது என்ற (மக்களின்) அவநம்பிக்கை அலையின்முன் அவன் நம்பிக்கையுள்ளவனாயிருந்தான். அவனுடைய வாழ்க்கையில் தேவனே இயங்கும் சக்தி முழு சேதமும் அந்த நாட்டை வெல்ல முடியாதென்று சொன்னபோது காலேப் மட்டும் உறுதியாயிருந்தான்.

3. பெரும்பான்மை மக்களின் சுவிசேஷத்தால் அவன் அடித்துச் செல்லப்படாதிருந்தான். புகழ்பெற்றவனாயிராததற்கு அவன் தைரியமுள்ளவனாயிருந்தான். மரிக்க வேண்டிய நிலை வந்தாலும் கூட (எண்.14:10). அறிகுறி என்னவென்றால் தேவன் குறுக்கிடாமல் போயிருந்தால் கல்லெறிந்து கொல்லப்பட்டிருப்பான்.

4. எதிராக செயல்பட்டவர்களைத் தேவன் அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் கண்டனம் செய்கிறார் (எண்.14:31).

5. அவர்களுடைய முரட்டாட்டமுள்ள மனப்பான்மை தெளிவாகத் தெரிகிறது. தேவன் அவர்களைப் போக வேண்டாமென்று தடை செய்தும் தங்கள் விருப்பத்தின்படி போனார்கள் (உபா.14:45).

தேவன் செல் என்று சொன்னபோது அவர்கள் மறுத்தார்கள்.

அவன் இறுதிவரை போராடி முயன்றான்.

1. காலேப் அந்த நாட்டை தனதாக்கிக் கொண்டான். 20 வயதிற்கு மேற்பட்டவர்களில் யோசுவா காலேப் ஆகிய இருவரை மட்டுமே கானானுக்குள் பிரவேசிக்கும் கனத்தைக் கொடுத்தார்.

2. தனது 85வது வயதில் இந்த இடத்தை வென்றபின் யோசுவாவிடம் வந்து சுற்றிலும் வேலியடைக்கப்பட்ட அனாக்கிம்ஸ் என்ற அரக்கர்களின் ஊரை வெற்றி கொள்ள யோசுவாவிடம் கேட்கிறார் (யோசு.14:11-12).

3. நாட்டை உளவு பார்க்கச் சென்றபோது அவருடைய பெலன் எப்படியிருந்ததோ அப்படியே இப்போதும் இருந்தது.

4. காலேப் அதை எளிதாக எடுத்துக் கொண்டாரென்று நாம் நினைக்கலாம்.

அவர் ஒரு அழகிய பள்ளத்தாக்கில் தோட்டங்களுடன் கூடிய இடத்தில் வீட்டைஅமைத்து யோசுவா போன்ற தன் நண்பர்களுடன் போர்க்கதைகளை பேசிக்கழித்திருக்கலாம்.

அவனும் யோசுவாவும் மட்டுமே தேசத்தில் 20 ஆண்டுகள் வித்தியாசத்தில் இருந்த மிகவும் வயது முதிர்த்தவர்கள்.

எளிதாகவும், பகைவர்களிடமிருந்து வெல்லப்பட்டதாயுமிருந்த இடத்திலிருந்து கொஞ்சம் இடத்தை எடுத்துக்கொள்ளும்படி சோதனையாயிருந்திருக்கலாம்.

5. நாம் எப்போது விடா முயற்சியுள்ள மக்களாக இருக்கவேண்டும் ஏனென்றால் நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட போகிறேன் நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன் ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்.

இது முதல் நீதியின் கீரிடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருள்வார் (2தீமோ.4:6-8).

எல்லோரும் வேண்டாம் என்று விட்டுவிடும் முதிர் வயதில் காலேப் கடினமாக வேலையைக் கேட்கிறார்.

அநேக மக்கள் ஓய்வு பெற்றதும் கடவுளுடைய சேவையை விட்டுவிடுகின்றனர். வயதாகிவிட்டது என்பதற்காக நீங்கள் தேவ பணி செய்வதை விட்டுவிடாதீர்கள். உடல் நலம் தொடர்பான பிரச்சினைகள் உங்களை குறைவாக செயல்படச் செய்யலாம். ஆனால் வயதானதை மட்டும் சாக்காகச் சொல்லாதீர்கள்.

## பாடம் –27

# காலேப், ஒரு மாபெரும் நேர்மறை நம்பிக்கையாளர்

**Caleb, A Great Faithful Optimist**

*-Jerry*

**-சென்ற மாதஇதழின் தொடர்ச்சி**

1. இரண்டு குழுவினருடைய நோக்கத்தையும் கவனியுங்கள் (எண்.13:30,31).
காலேப் சொன்னார் அதை நாம் எளிதாய் வென்றுவிடலாம்.
1. கவனியுங்கள் காலேப், சென்று போரிட்டு அந்த தேசத்தையெல்லாம் வென்றுவிடலாம் என்று சொல்லாமல் நாம் அதை சொந்தமாக்கிக்கொள்வோம் என்றார்.
2. முன்பே வெற்றி கொண்டதை விட அந்தத் தேசம் நன்றாயிருக்கிறது.
3. அவர்கள் அந்த தேசத்தை வென்றெடுத்துக்கொள்வார்கள் என்பதில் சந்தேகமேயில்லை. அதைக் காத்துக் கொள்ள அவர்களுக்கு வல்லமையுண்டு. ஆனால் தேவன் அவர்களோடிருக்கிறார்
அந்த மக்கள் சொன்னார்கள் எங்களால் முடியவில்லை.
1. நகரங்களும், மக்களும் எங்களைவிடவும் பலமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.
2. அவர்களும் அதே பிரச்சனையைப் பார்த்துக் கொண்டிருந்தார்களா என்று உங்களுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கலாம்?
இதில் என்ன வித்தியாசம்?
1. அளித்த தகவல் அடிப்படையில் ஒன்றுதான் மக்கள் எதிர்க்க முடியாதவர்கள் மற்றும் நகரம் சுற்று அவர்களால் சூழப்பட்டுள்ளது என்றார்கள்.
2. தேவனுடைய மறைவிலே காலேப் அந்தப் பிரச்சனையைப் பார்த்தார் (எண்.14:8,9). பிரச்சனைகளைக்காண அவர் தன்னுடைய கண்களை ஏறெடுக்கவில்லை. நகரங்கள் பெரிதென்று அவனுக்குத் தெரியும். ஆனாலும் தேவன் அவர்களோடிருப்பதால் வெற்றி உறுதி செய்யப்பட்டது.
3. தேவன் யாரிடம் சண்டைபோடச் சொன்னாரோ அவர்களிடம் சண்டைபோட காலேப் பயப்படவில்லை. எடுத்துக்காட்டு தாவீது கோலியாத்.
4. தேவன் எங்குபோகச் சொன்னாரோ அங்கேபோக காலேப் பயந்ததில்லை. ஒரு ஜனாதிபதி சொன்னபடி நாம் பயப்பட வேண்டிய ஒரே காரியம் பயத்திற்கு மட்டுமே. நேரடியாகச் சொன்னால் மக்கள் பயத்திற்கு மட்டுமே பயப்படவேண்டியிருந்தது.
5. எதையுமே சீக்கிரம் முடியாததென்று விட்டு விடக் கூடியவன் மனிதன்.
மக்கள் ராபர்ட் புல்ட்டனின் நீராவிப் படகு திட்டத்தை முட்டாள்தனம் என்று ஏளனம் செய்தார்கள்.
யோசுவா காப்பர்ஸ்மித் என்பவர் தொலைப்பேசிக்கான பங்குகளை விற்க பாஸ்டனில் முயற்சித்தபோது கைது செய்யப்பட்டார். நன்கறிந்த மக்களெல்லாம் மனித சத்தத்தை ஒரு கம்பி மூலமாய் கடத்துவது கூடாத காரியமென்று அறிந்திருந்தனர்.
6. கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்கள் நம்பிக்கையும் தைரியமுள்ளவர்களுமாய் இருக்கவேண்டும்.
என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு (பிலி.4:13)
7. உலகிற்கு சுவிசேஷத்தை கொண்டு செல்லும் பணியில் மக்கள் பிரச்சனைகளைத்தான் எண்ணுகின்றனர். அது கூடாததென்று அவர்கள் காண்கின்றனர்.
நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையை விட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும். அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக் காரனானேன் (கொலோ.1:22,23).
எல்லாரும் அப்போஸ்தலர்களல்ல சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். அவன்



எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள். புறஜாதியார் அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினார்கள். நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள். கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று" (அப்.13:44-49).

**உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார்.** ஆண்டவர் இயேசுவைக்குறித்தும், அவருடைய வல்லமையுள்ள வசனங்களை எடுத்து பிரசங்கிக்கும்போதும் அநேகர் விசுவாசமுள்ளவர்களாக மாற்றப்பட்டார்கள். விசுவாசிகளாகி கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட்டார்கள். "தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக்குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்பொழுது சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று, பிலிப்பைப்பற்றிக் கொண்டு, அவனால் நடந்த அடையாளங்களையும் பெரிய அற்புதங்களையும் கண்டு பிரமித்தான். சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக்கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள்" அப்.8:12-14). இப்படியாக புறஜாதி நாடுகளிலும் சுவிசேஷ வசனத்தை முதல் நூற்றாண்டு சீஷர்கள் பிரசங்கித்தார்கள். அவைகளை ஏற்றுக்கொண்டு அநேகர் இரட்சிக்கப்பட்டார்கள் என காண்கிறோம். இயேசுவின் பிறப்பும் சிலுவை மரணமும் ஒரு கூட்டத்தாருக்கு மாத்திரமல்ல. உலகில் உள்ள அனைவருக்கும் அறிவிக்கப்படவேண்டிய ஒரு நற்செய்தியாகும். ஆகையால் சீஷர்களுக்கு கர்த்தர் கட்டளையிடும்போது நீங்கள் உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என்றார். ஆகையால் தேவனை அறியாத புறஜாதிக மக்களும் அவரை அறிந்து கொண்டார்கள். அவர் ஏன் சிலுவையில் பாடுபட்டார் என்பதை புரிந்துகொண்டார்கள். இன்றைக்கும் சில நாடுகளில் அவர் வெளிநாட்டு கடவுள் என்று சொல்லப்படுகிறார். அன்பானவர்களே, அவர் உலக தோற்றத்திற்கு முன்பே குறிக்கப்பட்டவர். அவர் முலமாகவே எல்லாம் உண்டாக்கப்பட்டது. அவர் உலகத்தை பாவத்திலிருந்து இரட்சிக்க வந்த உலக இரட்சகர். அவரை ஏற்றுக்கொள்ளாத ஒருவரும் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள இயலாது. ஆகையால் அவரை விசுவாசித்துப் பற்றிக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்படும்.

**மகிமையிலே எடுத்துக்கொள்ளப்பட்டார்.** மகிமை என்று பார்க்கும்போது அவர் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர் எங்கிருந்து வந்தாரோ அங்கே மறுபடியும் எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர் பூமிக்கு வந்ததின் நோக்கத்தை நாம் அறிகிறோம். அதைப்போல அவர் பரலோகத்தில் நமக்காக பிதாவினிடத்தில் பரிந்துபேசும்படியாக எடுத்துக்கொள்ளப்பட்டார் என்பதையும் நாம் அறியவேண்டும். எடுத்துக்கொள்ளப்பட்ட அவர் மீண்டும் வருவார். இதை தேவதூதர்கள் சொன்னார்கள்; "இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்துபார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று; கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ,

அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்" (அப்.1:9-11). ஆண்டவர் இயேசுவின் வருகைக்காக இன்றைய நாட்களில் கர்த்தருடைய பிள்ளைகள் ஆவலாய் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவருடைய வருகையிலே அவருடைய மணவாட்டியாகிய சபை அதாவது கிறிஸ்துவின் சபை பரலோகத்திற்கு அவரோடே எடுத்துக்கொள்ளப்படும். என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்று இயேசு சொன்ன உபதேசத்தை இங்கே நினைத்துப்பாருங்கள். அவராலே யன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. வானத்தின் கீழெங்கும் அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை. ஆகையால் இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக் கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார் என்று தியானித்தோம். இவ்வளவையும் யாருக்காக செய்தார். உங்களையும் என்னையும் மீட்கும் படியாகவும், மீட்டு பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்தில் சேர்க்கும்படியாகவும் வெளிப்பட்டார். இச்செய்தியை நீங்கள் இதுவரை அறியாதிருந்திருக்கலாம் அல்லது அறிந்தும் அதைக்குறித்து தியானிக்காமல் இருந்திருக்கலாம். இன்றே மாம்சத்திலே உன்னை மீட்க வெளிப்பட்ட ஆண்டவராகிய இயேசுவை விசுவாசித்து, பாவமன்னிபுக்கென்று ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போக கழுவப்படு. அப்பொழுது கர்த்தர் தம்முடைய சபையில் உன்னை சேர்ப்பார். இதற்கு உதவி செய்ய நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம். உங்கள் அருகாமையில் உள்ள கர்த்தருடைய சபையை நாடுங்கள். உங்கள் அருகாமையில் கர்த்தருடைய சபையில்லை என்றால் எங்களோடு தொடர்கொள்ளுங்கள்.

**இவைகளைக்குறித்து அப்போஸ்தலர்கள் கொடுக்கும் சாட்சி உண்டா?**

தேவன் கொடுத்த சாட்சியைக்குறித்தும் நாம் வேதத்தில் படிக்கிறோம்; "இதோ, ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது, இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று" (மத்.17:5). மேலும் அப்போஸ்தலனாகிய யோவான் சொல்லும்போது; "ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம். அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத் திலிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக்குறித்துச் சாட்சிகொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம். நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது" என்கிறார் (1யோவா.1:1-3). தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டதற்கான சாட்சிகள் அநேகமுண்டு. காலம் ஆண்டவருடைய பிறப்பை வைத்தே இரண்டாக பிரிக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவுக்கு முன் என்றும் கிறிஸ்துவுக்குப் பின் என்றும் படிக்கிறோம். இது தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாக இருந்தபடியாலே இதை யாரும் மறைக்க முடியவில்லை மறுக்கவும் முடியவில்லை. அந்த நாட்களிலே யூதேயா தேசத்தை அரசாண்ட ஏரோதின் நாட்களில் நடந்த சம்பவம் இது. இச்செய்தி உலகத்திற்கு இரட்சிபைக் கொடுக்கும் செய்தி. இதை நீங்கள் விசுவாசித்து பற்றிக்கொள்ளுங்கள்.



இயேசுகிறிஸ்து இப்பூமியில் மனுஷனாக வாழ்ந்தபோது, பொல்லாத ஆவிகளின் பிடியிலிருந்தும் வியாதிகளின் பிடியிலிருந்தும் நீங்கி குணமான சில ஸ்திரீகளும், ஏழு பிசாசுகளின் பிடியிலிருந்து நீங்கின **மகதலேனாள்** என்னப்பட்ட மரியாளும், ஏரோதின் காரியக்காரனான கூசாவின் (அரண்மனையில் வேலைசெய்தவனின்) மனைவியாகிய **யோவன்னாளும், சூசன்னாளும்**, தங்கள் **ஆஸ்திகளால் இயேசுவுக்கு ஊழியஞ்செய்து** கொண்டுவந்த மற்ற **அநேகம் ஸ்திரீகளும்** அவரோடு இருந்தார்கள். அன்பு சகோதரியே, உங்களால் ஒருவேளை ஊழியர்களுக்கு ஆதரவாகவும், சுவிசேஷ விஷயத்தில் பிரயாசப்படவும் முடியவில்லையென்றால் நீங்கள் சேர்த்துவைக்கும் பொருட்களையும், பணத்தையும், பூச்சியும் துருவும் அழித்துப்போட்டுவிடும். அழிந்துபோகிற உங்கள் பொக்கிஷங்களால், கர்த்தருக்கும் அவருடைய சபைக்கும் ஊழியஞ்செய்யக்கூடாதா? வாயிருந்தும் பேசாத, கண்களிலிருந்தும் காணாத, கால்களிருந்தும் நடவாத தேவனற்ற எத்தனையோ காரியங்களுக்கு கோடி கோடியாக காணிக்கை செலுத்தும் இந்த பூமியில் அண்டசராசரங்களுக்கெல்லாம் ஒரே தேவனாயிருக்கிறவர் வாசஞ்செய்யும் பரலோகத்திற்கு உங்களை கொண்டு செல்லும் ஒரே சபையாகிய கர்த்தருடைய சபைக்கு உங்கள் ஆஸ்திகளால் ஊழியஞ்செய்யுங்கள்.

ஸ்திரீகளாகிய நாம் சபையில் பேசவும், உபதேசம் பண்ணவும் அனுமதிக்கப்படவில்லை, என்ற போதிலும் சபைக்கு ஊழியஞ்செய்யும்படி சபைக்கும், ஊழியர்களுக்கும் ஆதரவாகவும், அவர்களுக்காகப் பிரயாசப்படவும் சுவிசேஷத்திற்காக மிகவும் பிரயாசப்படவும் நம்முடைய ஆஸ்திகளால் இயேசுவுக்கு ஊழியஞ்செய்யவும் நமக்கு ஏதுக்கள் உண்டு. அவைகளைப் பயன்படுத்தி கர்த்தருடைய சபை பலுகிப்பெருக நம்மை அர்ப்பணிப்போம். கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு கிறிஸ்துவையும், அவரால் உண்டாகும் நித்திய ஜீவனையும் பற்றி அறிவிப்போம். கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு அவருடைய சபையில் அங்கமாயிருப்பவர்களாகிய நாம் அவருடைய சபைக்கு ஊழியஞ்செய்ய தீவீரமாய் புறப்படுவோம். கர்த்தர் தாமே நம்மைப் பெலப்படுத்துவாராக! அதற்குரிய ஞானத்தையும் புத்தியையும் தேவன் உங்களுக்கு அருளும்படி நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**பொது அறிவு சோதனை**

**1. ராஜ்யசபைக்கு தலைமை தாங்குபவர் யார்?**
அ) ஜனாதிபதி ஆ) துணை ஜனாதிபதி இ) பிரதமர்

**2. உச்சநீதிமன்ற நீதிபதிகளை நீக்கும் அதிகாரம் படைத்தவ யார்?**
அ) குடியரசு தலைவர் ஆ) பிரதமர் இ) ஆளுநர்

**3. தேசிய நவீன சித்திர கூடம் எங்கு அமைந்துள்ளது?**
அ) சென்னை ஆ) ஐதராபாத் இ) நியு டெல்லி

**4. டெல்லி நகரின் பழைய பெயர் எது?**
அ) பாடலிபுத்திரம் ஆ) ஆக்ரா இ) இந்திர பிரஸ்தம்

**5. அக்டோபர் 24-ம் தேதியின் முக்கியத்துவம் எது?**
அ) ஐ.நா தினம் ஆ) ஆசிரியர் தினம் இ) கொடிதினம்

விடைகள்: 1.துணை ஜனாதிபதி 2. குடியரசு தலைவர் 3. நியு டெல்லி 4. இந்திர பிரஸ்தம் 5. ஐ.நா தினம்

பிழையற்றவர்களாக, பரிசுத்தமுள்ளவர்களாக நிலைநிறுத்தவே இவ்வுலகத்திற்குக் கடந்து வந்தார். இந்த நற்செய்தியை கிறிஸ்துவை பெற்றிராதவர்களுக்கு அறிவித்து அவர்களை வரவிருக்கும் ஆபத்திற்கு, நரகாக்கினைக்குத் தப்புவிக்க ஒத்தாசையாக இருப்போம். பவுல் மற்றும் அநேக ஊழியர்களுக்கு பெபேயாள் ஆதரவாயிருந்ததைப் போல கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உபதேசிக்கிற பரிசுத்தவான்களுக்கு உதவியாயிருப்போம்.

மேலும் பவுல் மரியாள் என்ற சகோதரியைக் குறித்து ரோமர்16:6-ம் வசனத்தில் குறிப்பிடுகிறார். “எங்களுக்காக **மிகவும் பிரயாசப்பட்ட** மரியாளை வாழ்த்துங்கள்”. பவுலுக்கும் அவரோடே கூட இருந்த உடன் ஊழியர்களுக்காகவும் மிகவும் பிரயாசப்பட்டிருக்கிறாள் இந்த மரியாள். ஆங்கிலத்தில் Mary bestowed much labour on us என்றெழுதபட்டுள்ளது. அவர்களை அதிகமாகத் தாங்கியிருக்கிறாள் அல்லது கஷ்டப்பட்டு அவர்களுக்காக உழைத்திருக்கிறாள். பாருங்கள், அன்றைய நாளில் ஒரு பெண் தனித்தவளாக கர்த்தருடைய ஊழியத்தில் பிரசங்கியார்களுக்காகப் பிரயாசப்பட்டிருக்கிறாள். இவளைப் போல **திரிபேனாள்**, மற்றும் **திரிபோசாள்** என்பவர்களும் கர்த்தருக்குள் பிராயசப்பட்டிருக்கிறார்கள் என்று ரோமர்16:12-ல் வாசிக்கிறோம். எனது அன்பு சகோதரியே, நீங்கள் எப்படி? கர்த்தருடைய ஊழியர்களுக்கு சபை வளர்ச்சிக்கென்று உதவியாயிருக்கிறீர்களா? உங்களுக்காக மரித்த கிறிஸ்துஇயேசுவுக்காகவும் அவருடைய சபைக்காகவும் பிரயாசப்படுகிறீர்களா? சற்றே உங்களைக் குறித்து சிந்தித்துப்பார்க்கும்படியாக உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

பவுல், இன்னும் சில ஸ்திரீகளைக் குறித்து பிலிப்பியர்4:2,3 வசனங்களில் குறிப்பிடுகிறார். எயோதியாள், மற்றும் சிந்திகேயாள் இருவரும் கிலேமெந்தோடும் மற்ற என் உடன் வேலையாட்களோடுங் கூடச் **சுவிசேஷ விஷயத்தில்** என்னோடே கூட மிகவும் **பிரயாசப்பட்டார்கள். அவர்களுடைய நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் இருக்கிறது** என்கிறார். சுவிசேஷ விஷயத்திலுங்கூட நாம் மிகவும் பிரயாசப்படவேண்டியவர்களாக இருக்கிறோம். அன்பு சகோதரியே, ஒருவேளை உங்களுடைய கணவன் ஒரு சுவிசேஷகராயிருந்தால், சுவிசேஷ விஷயத்தில் அவர்களோடு கூட நீங்களும் பிரயாசப்பட முடியும். வீட்டிலிருக்கிற வேலைகளைப் பார்க்கவே நமக்கு நேரமில்லை, பின் எப்படி கணவனோடு கூட சுவிசேஷ விஷயத்தில் ஒத்துழைக்க முடியும் என நினைக்கலாம். கிறிஸ்துவுக்குள் பவுலுக்கு உடன்வேலையாட்களாக **பிரிஸ்கில்லாள், ஆக்கில்லா** என்ற தம்பதியினர் இருந்திருக்கிறார்கள். இவர்கள் நமக்கு நல்ல மாதிரிகளல்லவா! ஒருமுறை இந்தத் தம்பதியினர் கர்த்தருடைய மார்க்கத்தில் உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து, ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம் பண்ணிக் கொண்டுவந்த அப்பொல்லோ என்பவனைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள் (அப்.18:25,26). இந்த பிரிஸ்கில்லாள் தன் கணவன் ஆக்கில்லாவோடு சுவிசேஷ விஷயத்தில் பிரயாசப்பட்டிருப்பது நம்மை உற்சாகப்படுத்தவில்லையா? நமக்காக மரித்து நம்மை பரிசுத்தமாக்கியவருடைய சுவிசேஷ விஷயத்தில் நாமும் பிரயாசமெடுத்துக்கொள்வோம். அப்பொழுது கர்த்தருடைய சபைக்கு ஊழியஞ்செய்கிறவர்களாயிருப்போம்.





# தமிழக கிறிஸ்துவின் சபை ஊழியர்களுக்கான மூன்றாவது சிறப்பு ஐக்கிய கூட்டம்

**இடம்: ஹோட்டல் அருண், 24, ஸ்டேட்பேங் ரோடு, (ரயில்வே ஸ்டேஷன் சமீபம்) திருச்சி -1**

**நாள்: புதன் கிழமை 09.05.2018**

**நேரம்: காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை**






- கிறிஸ்துவின் சபை ஊழியர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
- உங்கள் வருகையை உறுதிசெய்ய 94435 58041 என்ற எண்ணுக்கு SMS மூலம் உங்கள் முழு முகவரியை பதிவு செய்து அனுப்புங்கள்.
- வருகைதரும் ஊழியர்களை கனப்படுத்த விரும்புகிறோம்.
- உங்கள் ஊழியத்தின் கருத்துக்களை மனந்திறந்து பகிர்ந்து கொள்ள ஓர் அரிய வாய்ப்பு.
- ஏப்ரல் 30-ம் தேதிக்குள் பெயரைப் பதிவு செய்யவும். வாருங்கள் ஒருமனப்பட்டு ஜெபிப்போம்.
- இக்கூட்டங்களுக்கு உதவிசெய்ய விரும்பமுள்ளவர்களை வரவேற்கிறோம்.
- இக்கூட்டத்தின் நோக்கம் சகோதரர்களுடைய ஐக்கியத்தை உறுதிப்படுத்துவதும், ஒரே சத்தியத்தை எடுத்துரைப்பதுமாகும்.

"நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி.... எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது" - 1 யோவான் 1:3

"அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" (யோவான் 17:21)

# பழைய மனிதனின் பாவம் களையப்படுதல்

## Putting Off The Old Man of Sin

-J.C.Choate

இன்னொரு வேத பாடத்திற்கு உங்களுக்கு நன்றிகூறி வாழ்த்தி வரவேற்கிறேன்.

உங்களை இரட்சித்து ஒரு புதிய மனுஷனாக மாற்றக்கூடி ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து இயேசுவை உங்களுக்குச் சுட்டி காட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன். சாத்தான், பழைய பிசாசு உங்களை அழித்துவிடும், ஆனால் கிறிஸ்து உங்களுக்கு ஜீவனையும், புது வாழ்வையும், சிறந்த வாழ்வையும், நம்பிக்கையையும் கொடுக்க முடியும்.

இச்சமயம் நம்முடைய வேத பாடத்திற்கென வேதாகமம் திருமணத்தைக்குறித்தும், விவாகரத்தைக் குறித்தும், மறுதிருமணத்தைக் குறித்தும், விபசாரத்தைக் குறித்தும் என்ன கூறுகிறது என சிந்தித்துப் பார்க்க விரும்புகிறேன். உலகம் இவ்வித எண்ணத்திலும், திருமணத்தைக் குறித்த மனநிலையிலும் மிகவும் தாராளமாகயிருப்பதினால் இந்தக் காரியத்தைக் குறித்துப்படிப்பது மிகவும் முக்கியமானதாயிருக்கிறது. இருந்தபோதிலும் உலகத்தின் இப்பகுதியில் அதிகமதிகமாக விவாகரத்துகளும் அல்லது திருமண முறிவுகளும் காணப்படுகின்றன. இதன் அர்த்தம், இல்லங்கள் அல்லது குடும்பங்கள் ஏதேனும் காரணங்களுக்காக முறிந்து விடுகின்றன, அத்தோடு பல பல காரணங்களுக்காக இரண்டாவது திருமணம் செய்கின்றனர். இதன் விளைவால் குழந்தைகள் அலட்சியப்படுத்தபட்டு, பாதுகாப்பின்றி தள்ளிவிடப்பட்டு, நிரந்தரமாக உணர்வு பூர்வமாக அழிவுக்குள்ளாகின்றனர். இது போல் வருகின்ற வருடங்களில் தொடர்ந்து நடைபெறுகையில், உங்களால் எப்பேர்பட்ட உலகை நாம் நமக்குள் கண்டுகொள்ளபோகிறோம்?

சமீப வருடங்களாக இல்லங்கள், மற்றும் குடும்பங்கள் வாழ்க்கையில் பல சத்துருக்கள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. திறந்த மனதுடன் மனுஷர்களையும், பெண்களையும் மேலும் குறிப்பாக இளம் வாலிபர்களை இணைத்து வாழவும், பிள்ளைகளை தொந்தரவு செய்யாமல் சட்டப்படி திருமணம் செய்யவும் ஊக்கப்படுத்துகின்றவர் இருக்கின்றனர். விவாகம் மற்றும் குடும்ப வாழ்க்கை என்பது பழைய நாகரீகம், பழங்காலப் பழக்கம், எனவே நவீன புதிய முறையே அவசியமாகயிருக்கிறது என கூறுகின்றனர். ஒரே பாலரின் பாலுறவும் வாழ்க்கையின் வேறொரு நடைமுறையாக இருக்கிறது. திருமணமாகாதவர்கள் அத்தோடுகூட திருமாணவர்கள் மத்தியில் கருக்கலைப்பு பழக்கம் வெளிப்படையாகவே இருக்கிறது. இன்றைய நாட்களில் இக்காரியங்கள் வெளிப்படையாகவே உலகத்தின் சம்மதத்தோடுகூட நடைபெறுகின்றன. ஒரு சில வருடங்களுக்கு முன்பாக இக்காரியங்களில் ஈடுபட்டுகொண்டிருந்தவர்கள், இக்காரியங்கள் சரியல்ல என கருதுகின்றவர்கள் முன்பாக தங்கள் முகத்தை சுளிக்கின்றனர். இது மனிதன் எவ்வளவு தூரம் சென்று விட்டான் எனக் காண்பிக்கிறது, ஆனால் இது தவறான வழியாகும்.

தேவன் இக்காரியங்களைக் குறித்து பேசியிருக்கிறார் என்பதை உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். மேலும் வேதாகமத்தில்



சபைக்கு ஊழியஞ்செய்தல்

## *Serving The Church*

-Glory Arjunan



சபை என்பது என்ன? இந்த வானத்தையும் பூமியையும் படைத்த ஒரே தேவனுடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்து தம்முடைய இரத்தம் முழுவதையும் சிந்தி சம்பாதித்த ஜனக்கூட்டமே சபை. ஆம், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் பாவமற கழுவப்பட்டு ஒரே சிந்தையோடு கூட தேவனை தொழுது கொண்டு வருகிற அந்த மக்களின் கூட்டம் தான் சபை. அன்பு சகோதரியே, நீங்கள் இந்த ஜனக்கூட்டத்தில் ஒருவராயிருப்பீரென்றால், இந்த முழு சபைக்கும் ஊழியஞ்செய்ய உங்களை அர்ப்பணிப்பீர்களா? இந்த சபையில் உங்களை அங்கமாக்க இயேசு உங்களுக்காக மரித்தாரே! மரித்து உயிரோடிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இன்றும் ''சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறார்'' (எபே.5:29). கிறிஸ்துவே தலையாயிருக்கிற இந்தச் சபை பலுகிபெருகி விருத்தியடைய இதற்கு ஊழியஞ்செய்ய உங்களை அன்புடன் வேண்டிவிரும்பிக்கேட்டுக்கொள்கிறேன். கி.பி. முதல் நூற்றாண்டில் சபைக்கு ஆதரவாகவும், சபைக்காகப் பிரயாசப்பட்டவர்களாகவும், சுவிசேஷவிஷயத்தில் பிரயாசப்பட்டவர்களுமான சில ஸ்திரீகள் இருந்திருக்கின்றனர். அப்பேர்பட்ட ஸ்திரீகளை நமக்கு மாதிரியாக நோக்குவோம்.

கெங்கிரேயா ஊரிலிருந்த கிறிஸ்துவின் சபைக்கு **பெபேயாள்** என்ற சகோதரி ஊழியக்காரியாக இருந்தாள். அவளை பற்றி பவுல் கூறும்போது ''......அவள் அநேகருக்கும் எனக்குங்கூட ஆதரவாயிருந்தவள்'' (ரோம.16:1,2) என்கிறார். She was a succourer. ஒத்தாசையாக, ஆபத்துக்காலத்தில் உதவுபவளாக, தேவையான பொழுது உதவுபவளாக இருந்திருக்கிறாள் என்று பொருள். அன்பு சகோதரியே, இன்றைய தேவை என்ன? ஆபத்துக்காலத்தில், அதாவது பாவப்பிடியிலும், உலக சிற்றின்பங்களிலும், உலகக்கவலையிலும் சிக்குண்டு கொஞ்சம் கொஞ்சமாக தங்களுடைய சரீரங்களையும், தங்கள் ஆத்துமாக்களையும் அழித்துக்கொண்டு ஆபத்தான சூழ்நிலையில் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறவர்களுக்கு உதவி செய்ய வேண்டியதல்லவா உண்மையான தேவையாயிருக்கிறது. 'A friend in need is a friend indeed' என்ற ஆங்கிலப் பழமொழியை நாம் நன்கு அறிவோம். ஆபத்தில் உதவுபவனே நண்பன். மனிதநேயம் வேண்டுமென்று வாயளவில் சொல்லிக்கொண்டு கிரியை செய்யாமல் இருப்போமானால் வஞ்சகர்களாக இருப்போம். இன்று கிறிஸ்துவின் சபை வளர்ச்சியடையாமலிருப்பதற்கு நம்மிலுள்ள கிரியையில்லாத விசுவாசமே காரணம் என்று தான் சொல்லவேண்டும். ''கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்'' (எபே.5:27) என வாசிக்கிறோம். இயேசுவானவர் தம்முடைய சபைக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்து நம்மை கறைதிரையற்றவர்களாக,

மனிதன் தன் சுய- நலனுக்காக ஒவ்வொன்றையும் ஒவ்வொருவரையும் தியாகம் பண்ணுகிறபோது என்ன நடக்கிறது? பொய்,ஏமாற்று, களவு போன்றவைகள் அம்பலப்படுத்தப்படும்போது, யார் ஒவ்வொன்றையும் இழக்கிறான்? பாலியல் தொற்று வியாதிகள் மூலம், எய்ட்ஸ் வியாதியின் மூலம், கருச்சிதைவினால் உணர்ச்சிமிக்க சரீரத் தழும்புகள் மூலம்,யாருடைய சரீரம் அழிந்து போகும்? உதவியற்றவனாக, முதியோனாக குறைபாடுள்ளவனாக, ஒருவன் “மாய்த்துக்கொள்ள”-கொன்றுவிட- ஆயத்தமாயிருந்தால், அவன் உதவியற்றவனாகவும், வயதானவனாகவும், குறைபாடுள்ள வனா கவுமிருக்கும் போது அவனுக்கு என்ன நேரிடும்? ஒருவனுடைய நியாயங்கள் மற்றவர்களுடைய நியாயங்களால் நசுக்கப்படும் பொழுது, அவர்கள் குற்றவாளிகளாக மாறுகின்றனர்.

தேவனுடைய ஞானத்தில், நீண்டகாலத்திற்கு முன்பாக அவர் தம்முடைய வார்த்தையில், “பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்”(ரோம.6:23) என எச்சரித்தார். நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவோமானால், அவர் ஏற்படுத்தின இந்தக்கட்டளை பார்ப்பதற்கு ஒரு நியாயமற்ற கொடுங்கோன்மையான ‘கட்டளை’அல்ல. இது ஒரு உண்மையான கூற்று. பாவம் தவிர்க்க முடியாத விளைவுகளைக் கொண்டுவரும்.

திரும்பச் சென்று உங்களுடைய தீர்மானத்தை மறு ஆய்வு செய்யுங்கள். சாத்தானுடைய தந்திரமான பொய்களை நம்பி உங்களை அழித்துக் கொள்ளாதீர்கள்.

## நடப்புச்செய்திகள்

- திண்டுக்கல்லில் குறுகலான சாலைகளிலும் செல்ல வசதியாக இருசக்கர வாகன 108 ஆம்புலன்ஸ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- அமெரிக்காவின் உயரிய அறிவியல் விருதுக்கு, இந்திய வம்சாவளியை சேர்ந்த இரு ஆராய்ச்சியாளர்கள் தேர்வாகி உள்ளனர்.
- முகேஷ் அம்பாணி தலைமையிலான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரிஸ் நிறுவனம், சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து, மஹாராஷ்ராவில் ‘ஒருங்கிணைந்த டிஜிட்டல் தொழில் நகரம்’ ஒன்றை அமைக்க திட்டமிட்டுள்ளது.
- நீலகிரி எக்ஸ்பிரஸ் ரயிலுக்கு வயது 89.
- உலக அளவில் 415 மில்லியன் பேருக்கு சக்கரை நோய் இருக்கிறது.

## தெரிந்துகொள்வோம்

*-K.R.K.Ravi Asir*

- **பாம்புகளில் மொத்தம் 2400 இனங்கள் உள்ளன. ஆனால் இவைகளில் பாதிக்குமேல் இப்பொழுது அழிந்துவிட்டன.**
- **மிகப்பெரிய பாம்பு தென் அமெரிக்காவில் வாழும் அனகோண்டா. இது 8 மீட்டர் நீளமும் 220 கிலோ எடையும் கொண்டது.**
- **இராஜநாகம் 20 அடி நீளம் வரை வளரும். இது தனது விஷத்தை 10 அடி தூரத்துக்கு கக்கக்கூடியது.**



சொல்லப்பட்டுள்ளவற்றை நாம் குறித்துக் கொண்டு, அதற்கு மதிப்பளித்து; கர்த்தருக்குக் கீழ்ப்படியவேண்டிய நேரம் இது. இதைச் செய்ய மறுத்தால் இது துன்பத்தை வருவிக்கும். வேதம், "மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினாலே அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்" (கலா.6:7,8) என்கிறது.

ஆதியிலே தேவன் மனுஷனை சிருஷ்டித்தார் என்பதையும், அவர் மனுஷன் தனியாய் இருப்பது நல்லதல்ல என்றும் கண்டார் என்பதையும் நீங்கள் நினைவுகூருவீர்கள். பிறகு அவர், "தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்" (ஆதி.2:18). இவ்வாறு அறிவித்தார். தொடர்ந்து நாம் வாசிக்கையில், "அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார். அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" (ஆதி.2:21-24).

அங்கே மனுஷனும் மனுஷியும் இருந்தார்கள் என்பதை நீங்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம். மேலும் மனுஷன் தனிமையாக யிருப்பது நல்லதல்ல என்றும் கூறுகிறது. நிச்சயமாக ஒரு மனுஷன் தனியாக இருக்கமுடியும் அல்லது தன் வாழ் நாள் முழுவதும் மனைவியில்லாமல் இருக்க முடியும் அல்லது ஒரு மனைவி புருஷனில்லாமல் இருக்கமுடியும். ஆனால் அவர்கள் தனிமையாயிருப்பது முழுமையானதல்ல, அதாவது அவர்கள் பலுகிப் பெருகமுடியாது. மனுஷனும் மனுஷியும் முழுமையாக அல்லது ஒரே மாம்சமாக இணையும்போதுதான் அவர்கள் முழுமையாக இருக்கமுடியும். அவர்கள் திருமணம் செய்யாமலே பிள்ளைகளைப் பெற்றிருக்கலாம், ஆனால் தேவனுடைய அங்கிகாரம், ஆசீர்வாதங்கள், மற்றும் ஒருவருக்கொருவர் சட்டத்தின்படி உறுதியான உண்மையாக இணைந்து வாழ்ந்து, ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து தேவசட்டத்திற்கும் உலக சட்டத்திற்கும் கீழ்ப்படியவேண்டும். இதுவே திருமணம் என அழைக்கப்படுகிறது.

தயவு கூர்ந்து மனுஷன் தன் தகப்பனையும், தாயையும் விட்டு பிரிந்து தன் மனைவியுடன் ஒரே மாம்சமாக இருக்கும்படி இணைந்து வாழவேண்டும் என்பதையும் கவனியுங்கள். புதிதாக திருமணம் செய்த தம்பதியினர் தங்களுடைய பெற்றோரோடு வசிப்பது பல வித காரணங்களை முன்னிட்டு முடியுமென்றாலும், இது ஒரு ஆலோசனையல்ல பெற்றோருடன் ஒருவர் வசிக்க முயற்சிப்பதும், பிறகு பெற்றோர்கள் தொடர்ந்து புதிதாக திருமணம் செய்த தம்பதியினரை தங்கள் குழந்தைகளாக பராமரித்து, அவர்களிடம் எதை செய்யவேண்டும், எதைச்

செய்யக்கூடாது இன்னும் பல்வேறு காரியங்களைக் கூற முற்படுவர். இது ஒருவேளை துவக்கத்தில் சரியாக காணப்படலாம் ஆனால் நாட்கள் செல்ல செல்ல இது தொடர்ச்சியாக மிகக் கடினமான ஒன்றாக, குறிப்பாக மனைவிகளுக்குத் தோன்றலாம். ஆனபடியினால் புதிய தம்பதியினர் தாங்களாகவே முயன்று தங்களுடைய சொந்த வீட்டில் குடியிருந்து, வேலைசெய்து, தங்களுடைய சொந்த தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளும்படி தங்களுடைய பெற்றோர்களை விட்டுப்பிரிந்து வாழவேண்டும். நினைவுகூருங்கள், தேவன் மனுஷனையும் மனுஷியையும் உண்டாக்கினார். மேலும் அவர் அவர்களுக்கு எது நல்லது என்பதையும் அறிகிறார். பவுல், சபையைக் குறித்து பேசுகின்றார், கிறிஸ்துவோடுகூடிய அதனுடைய உறவினை அல்லது சபையை மணவாட்டியாகவும், கிறிஸ்துவை மணவாளனாகவும், தொடர்ந்து ஆதியாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதையும் இவ்வாறாக சுட்டிக்காண்பிக்கிறார், "இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" (எபே.5:21).

நாம் மத்தேயு 19 திற்குத் திரும்பும்போது அந்நாளில் பக்தியுள்ள பரிசேயர், இயேசுவை சோதிக்கும்படி அவரிடம் வந்து; "புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா என்று கேட்டார்கள்" (மத்.19:3). தொடர்ந்து வாசிக்கையில், இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தராமாக: ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்" (மத்.19:4-6). இயேசு ஆதியிலே மனுஷனுடனும், மனுஷியுடனும் தேவன் கொண்டிருந்த உறவு முறைக்குத் திரும்பி தொடர்ந்து விளக்கமளிக்கிறார். அவர் அதை ஆதியிலே எது உண்மையாயிருந்ததோ அதுவே இன்றும் உண்மையாயிருக்கிறது என்று சொன்னார். அவர் மேலும் விளக்கமாக ஆணும் பெண்ணும் திருமணத்தில் இணையும் போது என்பதனின் கருத்து, அவர்கள் ஒருவரோடொருவர் இணைக்கப்பட்டுள்ளனர். அதன்பின் தேவன் அவர்களை இணைத்திருக்கிறார் அல்லது ஒரே சரீரமாக்கியுள்ளார், ஆனபடியினால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன், மேலும் அழிக்காதிருக்கக்கடவன்.

பரிசேயர் மறுபடியும் திரும்பி வந்து "...தள்ளுதற்சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார் என்றார்கள்" (மத்.19:7). இதன் வழியாக இயேசுவை குற்றப்படுத்தும்படி வகை தேடினார்கள். இயேசு, தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன் எனப்போதித்தார். எனவே மோசே உங்கள் இருதய கடினத்தினிமித்தம் தள்ளிவிடலாமென்று தள்ளுதற்சீட்டைக் கொடுக்க அனுமதித்தார். பிறகு இயேசு, "உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதய கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை" (மத்.19:8)



தீர்மானத்திற்கும் எனக்கு எதுவெல்லாம் சரியோ அது 'சரி'என்பதே அடிப்படை "தத்துவம்" என்பதாகயிருக்கிறது. **ஆனால் இவ்வுலக இன்பங்கள் என்னென்ன விளைவுகளைக் கொடுக்கிறது?**

✦ ஒரு நபர் அனைத்து உலக இன்பங்களுக்குக்கான கதவுகளை மனதார திறக்கிற பொழுது, சாத்தான் ஒரு உணர்ச்சி மிகுந்த நல்ல காலத்தை வாக்குப்பண்ணுகிறான். ஆனால் உலக இன்பங்களிலிருந்து வரும் விளைவுகள் என்ன? யார் மதுவிருந்திலிருந்தும், ஆல்கஹாலுடன் தன் உடல்நலத்தை அழிக்கிறதிலிருந்தும் விடுவித்துக்கொள்ள எச்சரிக்கையாயிருக்கிறார்? யார் ஆல்கஹாலிலும் மற்ற துற்பழக்க வழக்கங்களினாலும் தன் குடும்ப போஜனத்தையும், வீட்டையும், துணிமணிகளையும் வீணாக்குகிறார்? யார் ஒருவித குடிபோதைமயக்கத்திலிருக்கும் போது தன் மனைவியையும் குழந்தைகளையும் அடிக்கிறான்?

யார் அளவுக்கு மிஞ்சிய மயக்கமருந்தினால் மரிக்கிறான்? எவள் அதிகமான போதை மருந்து மயக்கத்தினால் உலகத்தின் அசுத்தத்தில் வசிக்கிறபோது தன் குழந்தைகளை வீட்டில் தனியாக விட்டுவிட்டுச் செல்லுகிறாள்? யார் தன்னுடைய தாயின் உலகஇன்பமான போதைபழக்கத்தினால் யாருடைய குழந்தைகள் போதைப்பழக்கத்திற்கு அடிமையாக அல்லது கொடூரமான அங்கஈனமாக மற்றும் மூளை வளர்ச்சி குறைவாக பிறந்துள்ளனர்?

யார் பல வருடங்களாக புகைப்பிடித்தபின் மூச்சுவிடமுடியாதபடி நுரையீரல் நோயினால் அவதிப்படுகின்றனர்? யார் உணர்ச்சிமிக்க, நிதிசம்பந்தபட்ட, உதவியற்று மரிக்கிறவர்களாக, மருத்துவத்திற்காக எண்ணற்ற கிரயம் செலுத்தியும் ஒரு போதும் குணமாக்கமுடியாத நோயினாலும் அவதிபடுகிறான்?

யார் தான் கொண்டிருந்த அனைத்தையும் சூதாடி தொலைத்து தன்னுடைய வாழ்க்கை சாப்பாட்டிற்கும் வழியில்லாமல் போனதினால் தற்கொலை செய்கிறான்? மற்றவர்கள்போல் வெறுப்பு மற்றும் மனகசப்பு நிறைந்த இருதயத்தைக் கொண்டிருப்பதினால் உயர் இரத்த அழுத்தமும் சரீரப் பிரச்சனைகளையும் யார் அதிகரிக்கிறான்? யார் சகிப்புத்தன்மையற்ற மனநிலைகொண்டிருப்பதினால், குடும்பத்திற்காக, நேசிக்கப்பட்டவர்களுக்காக, நண்பர்களுக்காக, கூட்டாளிகளுக்காக வாழ்க்கையை நாசமாக்குகிறான்?

✦ ஒரு மனிதன் மனதில் எல்லா வேலிகளையும் நீக்குகிற பொழுது, மறுபடியும் சாத்தான் ஒரு மிகநல்ல காலத்தை வாக்குப்பண்ணுகிறான். ஆனால் ஒருவன் தான் விரும்புகிறதையெல்லாம் செய்கிறபோது, என்ன நடக்கிறது? அவன் 'விதிகளை மீறுவதில்' சந்தோஷமடையலாம், மேலும் அவன் தெரிந்து கொள்ளுகிறதை யெல்லாம் செய்வதில் சுதந்திரவாளியாக இருக்கின்றோம் என நினைக்கலாம், ஆனால் அவன் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவனாக மாறுகிறான். எல்லா விதிகளும் சிறந்த வாழ்க்கை, குறைந்த எதிர்ப்புதன்மை மற்றும் மனிதனுக்கிடையே குறைவான பிரச்சனைகளை உருவாக்கவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒருவன் விதிகளை புறம்பாக்கும்போது, பொதுவாக சமுதாயத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அமைப்பிலிருந்து அவன் தாமே புறம்பாக்கப்படுகிறான்.

✦ ஒரு மனிதன் எதையும் செய்ய ஆயத்தமாக இருக்கும் பொழுது, மறுபடியும் சாத்தான் ஒரு மிகப்பெரிய நல்ல காலத்தை வாக்குப்பண்ணுகிறான். ஆனால் ஒரு

## நான் உலகத்தின் "வேடிக்கை"யான காரியங்களை அநுபவிக்க விரும்புகிறேன்

### I Want To Enjoy 'Fun' Things of The World

-Betty




ஒரு கட்டுப்பாடான வாழ்வை தெரிந்துகொண்ட, மற்றும் தம் நண்பர்கள் மீது அன்பு காட்டுகிற கிறிஸ்தவர்களை பார்க்கின்ற அநேகர் இதற்கு எதிரிடையான ஒரு உலகப்பிரகாரமான இன்ப வாழ்வோடு இசைந்தவர்களாய் **அவர்கள் குறைந்தபட்சம் தங்களுடைய இளமைப் பருவத்திலாவது உலகப்பிரகாரமான காரியங்களை அநுபவிக்கவேண்டுமெனத் தீர்மானிக்கின்றனர்.** தங்களுடைய நினைவுகளில், கிறிஸ்தவர்கள் சுய-வெறுப்பு மற்றும் சிலுவை-சுமத்தல் போன்ற வேதனை நிறைந்த காரியங்களில் ஒன்றான வாய்விட்டு சிரிப்பதற்கும் கட்டுபாடுள்ள ஒரு வாழ்வு வாழவேண்டியவர்களாக இருக்கின்றனர் என எண்ணுகின்றனர். யார் ஆனால் ஒரு மதியீனன் தாமாகவே உலகத்தின் எல்லா "நன்மை"யான காரியங்களை இழப்பானா?

**உலகம் கொடுக்கிறதான இன்பங்கள் எவையெவை?**

✦ **உலக இன்பம்.** ஒரு நபர் குடி, போதை, புகைபிடித்தல், சூதாடுதல், ஒழுக்கங்கெட்டசெயல், ஆபாசமான பாஷை, வெறுப்பு, மற்றும் சோதனைக்குரிய மற்ற நடத்தை போன்ற எந்த செயலையும் அனுமதிக்க விரும்புகிற இவைகளில் உலக இன்பத்திற்கு சுதந்திரம் உண்டு.

✦ **தவிர்ப்பதிலிருந்து சுதந்திரம்:** தவிர்ப்பதிலிருந்து சுதந்திரம் என்பது "விதிகளை" மீறும் ஒரு செயலாகும் அவன்/அவள் தன் இச்சைக்கேற்ப உடுத்திக்கொள்வது, தான் விரும்புகிற இடத்திற்குச் செல்வது, தான் தெரிந்தெடுக்கிற வாழ்க்கை முறையினை பின்பற்றுவது, மற்றவர்களுக்காக பொறுப்புள்ள தியாகம் செய்வதை தவிர்ப்பது ஆகும். இப்படிப்பட்ட சுதந்திரத்துடன், அங்கே பரஸ்பர உதவி, நீதி நெறி. ஒழுக்கம் அல்லது சமயக்கட்டுப்பாடுகள் போன்றவைகள் இல்லை. அங்கே இப்படிப்பட்ட காரியங்கள் 'பாவம்' போலவும், இதைச் செய்ய வேண்டும் அல்லது இதைச் செய்யக்கூடாது போன்ற மனசாட்சிக்குரிய அறிவுறுத்தல் போலவும் தோற்றமளிப்பதில்லை.

✦ **ஒரு நபருடைய சுய-நலங்களின் உயர்வு:** ஒரு நபருடைய சுய-நலங்களின் உயர்வு என்பது பொய், ஏமாற்று, அல்லது களவு போன்றவைகள். ஒருவர் பெற விரும்புகிறவற்றைக் கொண்டுவருமானால் இவைகளை அவன் செய்ய முடியும்; ஒருவனுடைய சுய சரீரத்தின்மேல் முழு அதிகாரம் செலுத்த கருச்சிதைவு அனுமதிக்கிறது, தீராத கொடிய வியாதியஸ்தரை மரிக்கவைத்தல் ஒருவனை தேவையிலுள்ளளோர் அல்லது உதவியற்றோர் மேலுள்ள பொறுப்புகளின் அதிகாரத்திலிருந்து விடுவிக்கிறது; உறவுகளில் வாழ்வது தனிப்பட்ட சுதந்திரத்தையும் அனுமதிக்கிறது. ஒவ்வொரு தெரிந்தெடுத்தல் மற்றும் ஒவ்வொரு



என்று விளக்கினார். அவர் மேலும் மோசே அல்லது தேவன் இதை அனுமதித்தனர் ஆனால், ஆதியிலே ஆணும் பெண்ணும் விவாகரத்து பண்ணுகிறது தேவனுடைய சித்தமாயிருக்கவில்லை. "ஆதலால் எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ்செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகப்பண்ணினால், அவன் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்; தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்.19:9). இப்போது நாம் இது குறித்து சொல்லப்பட்ட விஷயத்தைக் கவனிப்போம்.

1). இது ஆதிமுதல் இன்றுவரை திருமணத்தில் ஒரு மனிதனும் ஒரு மனுஷியுமே வாழ்நாள் முழுவதும் இணைக்கப்பட்டிருக்கவேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. திருமணம் என்பது ஒரு அலட்சியம் செய்யமுடியாத நிகழ்வு. இதை இலேசாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இது நிலையான ஒப்பந்தமாகும்.

2). புருஷனோ அல்லது மனைவியோ அவிசுவாசியாகவோ அல்லது திருமணமாகாமலே புருஷன் மனைவியாகத் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருந்தால் இந்த திருமணம் ரத்து செய்யப்படவேண்டிய ஒரு காரியமாகும். ஒருவர் அல்லது மற்றவர் மற்றும் ஆண் அல்லது பெண்ணோடு தகாத உறவு கொண்டிருக்கும்போது முரண்பாடான இந்த திருமணம் முறிக்கப்பட்டதாயிருக்கும். இருந்த போதிலும் குற்றம்செய்த ஒருவர் மன்னிப்பு கேட்டால் குற்றமற்ற மற்றொருவர் ஒருவேளை மன்னித்தால் இப்படிப்பட்ட திருமணம் காக்கப்பட இயலும். ஆனால் இப்படிப்பட்ட சூழ் நிலை இருக்குமானால் குற்றமற்ற நபர் அந்த காரியத்தை சரிசெய்ய மறுத்தால், அதன்பின் குற்றமற்ற நபர் குற்றமுள்ள நபரை தள்ளிவிடலாம் அல்லது விவாகரத்தினை கேட்கலாம்.

3). புருஷனும் மனைவியும் சட்டப்படியான திருமணத்தில் இணைக்கப்பட்டு முடிவுபரியந்தம் ஒருவரோ அல்லது மற்றொருவரோ மரிக்கும் வரை இருவரும் கட்டப்பட்டவர்களாகவே இருக்கவேண்டுமென பவுல் உரைக்கிறார். மேலும் அவர், "அதெப்படியென்றால், புருஷனையுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள்; புருஷன் மரித்த பின்பு புருஷனைப்பற்றிய பிரமாணத்தினின்று விடுதலையாயிருக்கிறாள். ஆகையால், புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம்பண்ணினால் விபசாரியென்னப்படுவாள்; புருஷன் மரித்தபின்பு அவள் பிரமாணத்தினின்று விடுதலையானபடியால், வேறொரு புருஷனை விவாகம் பண்ணினாலும் விபசாரியல்ல" (ரோ.7:2,3). பவுல் விதவையைக் குறித்து பின்பு பேசுகையில், அவள் மறுபடியும் திருமணம் செய்ய வேண்டுமானால் அவள் கிறிஸ்துவுக்குள் மட்டுமே திருமணம் செய்யவேண்டும். அதாவது ஒரு கிறிஸ்தவள் ஒரு கிறிஸ்தவனையே திருமணம் செய்யவேண்டும். அவர் மீண்டும் கூறுகிறார்," மனைவியானவள் தன் புருஷன் உயிரோடிருக்கும் காலமளவும் பிரமாணத்தினால் கட்டப்பட்டிருக்கிறாள்; தன் புருஷன் மரித்தபின்பு தனக்கு இஷ்டமானவனாயும் கர்த்தருக்குட்பட்டவனாயுமிருக்கிற எவனையாகிலும் விவாகம்பண்ணிக்கொள்ள விடுதலையாயிருக்கிறாள்" (1கொரி.7:39). ஆனபோதிலும், மனைவியானவள்

புருஷன் மரித்தபின்பு தனக்கு இஷ்டமானவனாயும் கர்த்தருக்குட்பட்டவனாயுமிருக்கிற எவனையாகிலும் விவாகம் பண்ணிக்கொள்ள விடுதலையாயிருக்கிறாள். மனைவியானவள் மரித்தபின்பு இதைப்போலவே புருஷனும் செய்துகொள்ளலாம்.

எனவே இதனுடைய முடிவுதான் என்ன? முடிவானது மனுஷன் மற்றும் மனுஷியின் திருமணத்தை குறித்து தேவன் கொண்டிருந்த திட்டம் கண்டிப்பாக தேவனுடைய திட்டதிற்கு கீழ் தொடர்ந்து வசிக்கவேண்டும். அதை மறுத்தால், மேலும் திருமணத்தில் தேவனுடைய திட்டத்திற்கு கீழ்ப்படியாமல் போனால், இது தனக்குத் தானே, தேவனுக்கு விரோதமான பாவமாகும். நாம் திருமணத்தில் தேவனுடைய சித்தத்தினை மதித்து, இதோடு ஒத்துப்போகும்போது தான் நாம் ஒரு விவாகத்தையும் ஒரு நல்ல குடும்பவாழ்வையும் கொண்டிருக்க முடியும்.

உண்மையாகவே, உங்களுடைய விவாக உறவுபற்றி எனக்குத் தெரியாது. நீங்கள் யாரென்றும், நீங்கள் எங்கேயிருக்கிறீர்கள் என்றும் எனக்குக் கவலையில்லை. நான் உங்களுடைய விவாகம் தேவசித்தத்தின்படி பரிசுத்தமானதாயிருக்குமென நம்புகிறேன். நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிராவிட்டால், நான் நம்புகிறேன் நீங்கள் ஒரு கிறிஸ்தவராக மாறுவீர்கள் என்று. நீங்கள் தேவனை விசுவாசிப்பதன் மூலமும், கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலமும், உங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, உங்கள் பாவங்கள் கழுவப்படும்படி ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ளலாம். இப்படிச்செய்கையில், கர்த்தர் உங்களை இரட்சித்து, தம்முடைய சபையில் சேர்ப்பார். இவ்விதமாக நீங்கள் ஒரு கிறிஸ்தவராகமாறலாம். தொடர்ந்து நாங்கள் உங்களோடு மேலும் படிப்போமானால் அல்லது இந்த சத்தியத்தை குறித்த வகையில் உங்களுக்கு உதவ வேண்டுமானால், தயவு செய்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

உங்கள் கவனத்திற்கு நன்றி, அடுத்த முறை சந்திக்கும்வரை வாழ்த்துக்கள்.

## நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல் – Evangelizing Our Friends *-TVOTI*



**நமது நண்பர்களுக்கான ஒரே செய்தி இயேசுவே**

**பாடம் -4**

Jesus is the Message to our Friends

இதை நாம் எவ்வாறு பிரயோகிக்கிறோம்?

நாமனைவரும் கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறோம். நாம் 1கொரி.12:12 ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப் பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்". நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் சரீரத்தின் தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள் என்ற வசனத்தின்படி (1கொ.12:27). கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கமாகயிருக்கின்றோம் (கொலோ.1:18). நாம் தேவனையும் கிறிஸ்துவையும் பூமியில் வெளிப்படுத்துகிறோம்! பவுல், "ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக் கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து..." (2கொரி.5:20) என்கிறார்.



இதன் பொருள் நாம் என்ன சொல்லுகிறோம், நம்மைச் சுற்றியிருக்கிறவர்களுக்கு முன் எப்படி நடந்து கொள்ளுகிறோம் என்பதற்கு நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால் மற்றவர்கள் நம்மைப் பார்க்கும்போது, அவர்கள் கிறிஸ்துவை சீர்தூக்கிப் பார்க்கிறார்கள். நாம் ஒரு நல்ல செல்வாக்கு அல்லது ஒரு கெட்ட செல்வாக்கு உடையவர்களாக இருக்கலாம்.

பவுல் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாக இருப்பது குறித்து விவாதிக்கிறான் (2கொரி.2:15). ஒரு நற்கந்தம் நம்மை ஒரு நல்வழியில் அல்லது ஒரு கெட்டவழியில் இது எந்தவிதமான வாசனையை சார்ந்திருக்கின்றதோ அதில் செல்வாக்கினை செலுத்துகிறது. நாம் தேவனுக்கேற்ற நற்கந்தமாக இருக்க விரும்புகிறவர்களாக இருக்கவேண்டும் அப்போதுதான் நமது நண்பர்களை கிறிஸ்துவுக்கென்று வசீகரிக்க முடியும்.

இயேசு நாம் உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்கிறோம் என்றார் (மத்.5:13-16). உப்பு உணவுப்பொருட்களை சுவையுள்ளதாக மாற்றுகிறது. நாம் இருளில் இருக்கும்போது வெளிச்சம் நமக்கு உதவி செய்கிறது. இது நாம் இடறிவிழாமலிருக்கும்படி நமது கண்களுக்கு வெளிச்சத்தைக் கொடுக்கிறதாக இருக்கிறது. வேதாகமத்திலுள்ள தேவனுடைய வார்த்தையின் மூலம் தேவனையும் கிறிஸ்துவையும் அதிகமாக அறிந்து கொள்ளும்படி நாம் நமது நண்பர்களை வசீகரப்படுத்தும்படி உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்கவேண்டும். நாம் மற்றவர்களுக்கு அறிவுறுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம். பவுல், "ஆகையால் கர்த்தருக்கு பயப்படத்தக்கதென்று அறிந்து, மனுஷருக்குப் புத்திசொல்லுகிறோம்" (2கொ.5:11) என எழுதினார்.

நாம் தேவனுக்கும் நம்முடைய நண்பர்களுக்குமிடையே பாலமாகக் கட்டப்பட்டிருக்கிறோம்!

தொடர்புடைய இவ்வேத வாக்கியங்களைப் படித்து விவாதியுங்கள்.

மத்.28:19,20; அப்.5:42; 2கொரி.3:2,5:20; எபே.1:23,5:23; கொலோ.1:18,2:9; 1தீமோ.3:15.

**விடையளித்து இக்கேள்விகள் குறித்து விவாதியுங்கள்:**

1. பாலத்தின் வேலை என்ன?
2. எவ்வாறு கிறிஸ்தவர்கள் தேவனிடமிருந்து மனிதவர்க்கத்திற்கு பாலம் போல் இருக்கின்றனர்?
3. ஒரு தூண் என்பது என்ன மற்றும் அது எவ்வாறு ஏதோ ஒன்றைதாங்கி நிற்பதில் வேலை செய்கிறது?
4. கிறிஸ்து இன்று தம்முடைய பணியைச் செய்வதற்கு ஏன் சபையை நம்புகிறார்?
5. தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் மற்றும் கிறிஸ்துவுக்கும் சபைக்குமுள்ள உறவு என்ன?
6. சபை மற்றவர்களுக்கு கிறிஸ்துவைப் பற்றி என்ன செய்தியைக் கொண்டுவருகிறது?
7. தேவன் இன்று தம் மகிமையை பூமியின்மேல் எந்த அமைப்பில் வைத்திருக்கிறார்?
8. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கமாயிருப்பது என்பதன் பொருள் என்ன?
9. 2கொரிந்தியர் 5:20 ல் அப்போஸ்தலர் பவுல் என்னவாக செயல்படுவதாக விவாதிக்கிறார்?
10. நமது செல்வாக்கினை விவரிக்கிற மூன்று உருவணிகள் யாவை?

**வகுப்புப் பயிற்சி:**

விசேஷித்த வாலிபர் நிகழ்ச்சி அல்லது வகுப்பு, அல்லது மாலை ஐக்கியகூட்டம் ஒவ்வொரு வகுப்பு அங்கத்தினரும் இக்குழுவில் சேரும்படி ஒரு நண்பனை அழைக்கவேண்டும்.